[7th February 1959

(*c*) Each Stage I Block is eligible for a financial allotment of Rs. 12 lakhs and each Stage II Block for a financial allotment of Rs. 5 lakhs. Previously, the aggregate financial content of a block during the pre-intensive and intensive stage was Rs. 12 lakhs whilst during the post intensive stage, an annual provision of Rs. 30,000 for works and schemes and Rs. 33,000 for staff was made.

Sri C. MUTHIAH : சமுதாய நலத் திட்ட ப்ளாக்குகள், C.D. ப்ளாக்ஸ், N.E.S. ப்ளாக்ஸ், ரிவெர்டெட் N.E.S. ப்ளாக்ஸ் என்று மூன்று பிரிவுகள் இருக்கின்றன. இவைகளில் இரண்டு பிரிவுகளுக்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பிரிவிற்கு பணம் ஒதுக்கப்படவில்லை. அந்தப் பிரிவிற்கு எப்போது பணம் ஒதுக்கப்படும்? அந்தப் பிரிவில் எப்போது வேலைகள் ஆரம்பிக்கப்படும்?

The Hon. Sri C. SUBRAMANIAM : முடிவடைந்த பிளாக்குகளைப்பற்றி தற்போது புனராலோசனை செய்ய முடியாது. பாக்கி இருக்கும் ப்ளாக்குகளைப் பொறுத்தவரையில், அவைகளுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளுக்கெல்லாம் இனி வரும் பட்ஜெட்டுகளில் பணம் ஒதுக்கலாம்.

DEPUTY SPEAKER : With the permission of the House, I will take five minutes more and finish the rest of the questions.

* 113 *Q*.—**Sri C. MUTHIAH** : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

சமுதாய நலத் திட்டப்பகுதியில் மேஜர் (II Grade) பஞ்சாயத்துக்களைச் சேர்க்க உத்தேசமுண்டா?

The Hon. Sri C. SUBRAMANIAM : That question does not arise as all the Panchayats within a Block are eligible for the benefit of the Community Development Programme.

Sri A. GOVINDASAMY : சில மேஜர் பஞ்சாயத்துக்கள் கம்யூனிடி டெவலப்மெண்ட் ப்ளாக்குகளாக எடுத்துக் கொள்ளப்பட்டும், சில மேஜர் பஞ்சாயத்துக்கள் அத்தகைய ப்ளாக்குகளாக எடுத்துக் கொள்ளப்படாமலும் இருக்கின்றன. உதாரணமாக வளவனூர் பஞ்சாயத்து இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. அதை இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்குமா?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்போதுள்ள உத்தரவுப் பிரகாரம், எல்லாப் பஞ்சாயத்துக்களையும் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ள முடியும்.

Epidemic diseases

* 114 *Q*.—**Sri P. G. MANICKAM** : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பரா—

(அ) நகரங்களிலும், கிராமங்களிலும் ரோடுகளின் ஓரங்களிலே திறந்த வெளியிலே பலகாரங்கள், மிட்டாய்கள், பானங்கள் போன்ற சாப்பிடக்கூடிய பொருள்களை விற்பதன் மூலம் காலரா, சீதபேதி போன்ற பெருவாரியான வியாதிகள் உண்டாகின்றனவென்று சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

(ஆ) அவ்வாறு சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருப்பின், எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை?

7th February 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) The Government are aware that the sale of exposed foodstuffs contribute to the spread of intestinal infections.

(b) The provisions of the Madras Public Health Act and the Prevention of Food Adulteration Act are enforced wherever necessary by the public health staff to prevent the sale of exposed foodstuffs.

SRI P. G. MANICKAM : தின் பண்டங்களை விற்பதையும் உணவுப் பொருள்களைக் கலப்படம் செய்து விற்பதையும் தடுக்க சர்க்கார் சட்டமியற்றியிருந்தாலும், கிராமங்களிலும் நகரங்களிலும் பண்டங்கள் சர்வ சாதாரணமாக அவ்வாறு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே இதை அறவே தடுப்பதில் ஆங்காங்குள்ள அதிகாரிகளை கவனம் செலுத்தச் செய்யும்பொருட்டு, ஒரு ஸ்பெஷல் உத்தரவை அந்த அதிகாரிகளுக்கு அனுப்ப சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சில மாதங்களுக்கு முன்பு தான் இதற்காக ஒரு தனி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் 15–6–1958-ம் தேதியன்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அது இது தான். அந்த உத்தரவில், பழங்கள், தித்திப்புத் தின்பண்டங்கள், இட்டிலிகள், தோசைகள், வடைகள், கோவாக்கள், ரசகுல்லாக்கள் முதலியவைகளை ஈ மொய்க்காமல் மூடி வைத்து விற்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை நகரத்தில்தான் எளிதில் அமல் நடத்த முடியும். கிராமங்களில் இதைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தான் அமல் நடத்த முடியும். அங்கே சுகாதாரக் கேடான வியாபாரப் பழக்க வழக்கங்களை திடீரென்று மாற்ற முடியாது. ஆனால் அங்கும் கூடிய வரையில் சுகாதார இலாகா சிப்பந்திகள் இது சம்பந்தமாக எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சுகாதாரக் கேடான வியாபார குறைகளைப் போக்க வேண்டுமானால் மக்களிடத்தில் அதற்குப் பிரசாரம் செய்ய வேண்டும். அதைச் செய்தால்தான், இத்தகைய பண்டங்களை வாங்கக்கூடாது, இவைகள் உடல் நலனுக்குக் கெடுதி விளைவிக்கக்கூடியவை என்பதை மக்கள் உணருவார்கள். அப்போதுதான் இந்தச் சட்டங்களும் உத்தரவுகளும் வெற்றி அடையும்.

*115 Q.—SRI P. G. MANICKAM : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் வருஷத்திலே கோயமுத்தூர் ஜில்லாவிலே எந்தெந்தத் தாலூக்காக்களிலே காலரா நோய் பரவியது?

(ஆ) எத்தனை பேர்கள் காலராவினால் பீடிக்கப்பட்டார்கள் ?

(இ) இவர்களுள், எத்தனை பேர்கள் இறந்தார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Cholera occurred in a mild epidemic form in the taluks of Bhavani, Coimbatore, Dharapuram, Erode, Gobichettipalayam and Udamalpet. Palladam and Pollachi taluks reported sporadic cases.

(b) 730.

(c) 342.

SRI P. G. MANICKAM : கனம் மந்திரி அவர்கள் இப்போது குறிப்பிட்ட தாலூகாக்களில் சில இடங்களில் ஒவ்வொரு வருஷமும் காலரா தோன்றிப் பரவுகிறது. ஆகையால், காலரா தோன்றிப் பரவிவரும் இப்படிப்பட்ட இடங்களை காலரா பரவும் இடங்கள் எனப் பிரகடனப்படுத்த